

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் கூட்டம் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் கோ.சுப்பையா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக துணைப் பொதுச் செயலாளர்,மண்டல பொறுப்பாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார். உடன் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தொகுதி பார்வையாளர்கள் தனுஷ், எம்.குமார், (வாசுதேவநல்லூர்) பி.எம்.ராமஜெயம், (சங்கரன்கோவில்) உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



தேனி வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் கூட்டம் வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. தலைமையில் நடைபெற்றது. இந்த நிர்வாகிகள் கூட்டத்தில் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் பெரியசாமி சிறப்பு உரையாற்றினார். உடன் சரவணக்குமார் எம்.எல்.ஏ. மாவட்ட துணைச் செயலாளர் செந்தில் முருகன், திருகண்ணன், மாவட்ட பொருளாளர் சுரேஷ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சங்கர், முருகேசன் மற்றும் ஒன்றியச் செயலாளர்கள், நகரச் செயலாளர்கள், பேரூர் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### அகமதாபாத்திலிருந்து புறப்பட்ட விமானம் கோர விபத்து! 241 பயணிகள் பலி!

# இதுபோல் இனி நடக்காவண்ணம் தடுப்பு - பாதுகாப்பு வழிமுறைகள் தேவை!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, ஜூன் 14- அகமதாபாத் பன்னாட்டு விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட விமானம், எதிர்பாரா விபத்துக் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புக்கு இரங்கல் தெரிவித்தும், இனி இதுபோன்ற விபத்துகள் நேராவண்ணம் உரிய தடுப்புக்கான, பாதுகாப்பு வழிமுறைகளைச் செய்வது அவசர, அவசியமாகும் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அவசர அறிக்கை வருமாறு:

இந்தியாவின் வரலாற்றில் மிகவும் வேதனையும், துயரமும் தந்த கருப்பு நாள் - 12.6.2025!

குஜராத் மாநில அகமதாபாத் பன்னாட்டு விமான நிலையத்திலிருந்து 242 பயணிகளை ஏற்றிக்கொண்டு லண்டனுக்குப் புறப்பட்ட ஏர் இந்தியா போயிங் விமானம் சில நிமிடங்களுக்குள், விமானக் கோளாறு காரணமாக, அதன் விமானி கட்டுப்பாட்டு அறைக்கு, "உயிருக்கு ஆபத்து, உதவுங்கள் ('May--Day')" என்று உதவி கேட்டு அழைத்துள்ளார். அதை ஏற்றுக்கொண்ட கட்டுப்பாட்டு அறை அதிகாரிகள், மீண்டும் விமானியைத் தொடர்பு கொள்ள முயன்றனர். ஆனால், அதற்குள் விமானத்தின் தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டது. விமானமானது, சில நிமிடங்களில் கட்டுப்பாட்டை இழந்து அந்த விமானம் நிலைய அருகில் மெகானி என்ற இடத்தில் உள்ள தனியார் மருத்துவக் கல்லூரி விடுதியின் கட்டடத்தின்மீது விழுந்து பயங்கர சத்தத்துடன் வெடித்துச் சிதறியது.

இதனால் விமானத்தில் பயணம் செய்த 242 பேரில், 241 பேரும், மருத்துவக் கல்லூரி மாணவர் விடுதியில் உணவருந்திக் கொண்டிருந்த மாணவர்கள் 5 பேரும் உயிரிழந்த கொடுமை நிகழ்ந்துள்ளது.

**எளிதில் மீள முடியாத அதிர்ச்சித் தகவல்!**

இலண்டனில் உள்ள தனது மகளைப் பார்க்கப் புறப்பட்ட குஜராத் மேனாள் முதலமைச்சர் விஜய் ரூபானி உள்பட 241 பேர் உடல் கருகி இறந்துள்ளது கொடுமையிலும் கொடுமை!

'விபத்து' என்பது எங்கும், எதிர்பாராமல் கண் இமைக்கும் சில நிமிடங்களில் ஏற்படக் கூடியதே என்றாலும், இப்படி ஒரு கோரம்!

'விமானத்தின் கருப்புப் பெட்டி' கிடைத்துள்ளது. அதிலிருந்து கூடுதல் தகவல்கள் கிடைக்கக் கூடும்!

'ஏர் இந்தியா' விமான சேவையின் நம்பகத் தன்மை, அண்மைக்காலத்தில் விமானப் பயணிகளிடம் வெகுவாகக் குறைந்து வரும் நிலையில், இந்த விமான விபத்து, அதனை மேலும் பல மடங்கு பெருக்கியுள்ளது.

**சரியான பாதுகாப்பு ஏற்பாடுகள் தேவை!**

இதுபற்றி சரியான நீதி விசாரணை நடத்தப்பட்டு, எதிர்காலத்தில் இது போன்று நடக்காவண்ணம் உரிய தடுப்புக்கான பாதுகாப்பு வழிமுறைகளைச் செய்வது அவசர அவசியமாகும்.

மறைந்த மனித உறவுகளுக்கு நமது ஆழ்ந்த இரங்கலும், இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதலும் உரித்தாகுக!

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

# அனைவருக்கும் வீடுகள் வழங்கக்கூடிய ஆட்சி திராவிட மாடல் ஆட்சி!

## அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!



திண்டுக்கல், ஜூன் 14- தமிழகத்தில் வாழும் அனைவருக்கும் வீடுகள் வழங்கக்கூடிய ஆட்சி திராவிட மாடல் ஆட்சி என்று ஆத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட 22 கிராம ஊராட்சிகளை சேர்ந்த 431 பயனாளிகளுக்கு கலைஞரின் கனவு இல்லத்திற்கான ஆணையை ஐ.பெரியசாமி வழங்கினார். 8 லட்சம் வீடுகள் கட்டப்பட்டு 2 லட்சம் வீடுகள் பூர்த்தியடைந்து 1 லட்சம் வீடுகள் கட்டுவதற்கான ஆணைகள் வழங்கப்பட்டு உள்ளது என்று அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட 22 கிராம ஊராட்சிகளை சேர்ந்த 431 பயனாளிகளுக்கு கலைஞரின் கனவு இல்லத்திற்கான ஆணை வழங்கும் விழா ஜெய்னி கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் சரவணன் தலைமை தாங்கினார். திண்டுக்கல் எம்.பி. ஆர். சச்சிதானந்தம், உதவி ஆட்சியர் மருத்துவர் வினோதினி, கோட்டாட்சியர் சக்திவேல், முன்னாள் மாவட்ட குழு தலைவர் பாஸ்கரன், ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன், ஒன்றிய செயலாளர்கள் முருகேசன், ராமன், திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆத்தூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் தட்சிணாமூர்த்தி வரவேற்று பேசினார்.

விழாவில் 431 பயனாளிகளுக்கு கலைஞரின் கனவு இல்ல திட்ட பணிக்கான ஆணையை வழங்கிவிட்டு பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி இந்தியாவிலேயே வரலாறு காணாத அளவிற்கு தமிழகத்தில் ஏழை எளிய மக்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டு வருகிறது. கலைஞரின் கனவு இல்லம் திட்டம் மூலம் 8 லட்சம் வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டு 2 லட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இவ்வருடத்திற்கான இதுவரை 1 லட்சம் பயனாளிகளுக்கு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. இன்று ஆத்தூர் ஒன்றியத்தில் மட்டும் 431 பயனாளிகளுக்கு ஆணைகள் வழங்கப்பட்டு உள்ளது. இதன்மூலம் தமிழகத்தில் வீடுகள் இல்லாதவர் யாருமில்லை என்ற நிலை உருவாகி வருகிறது. அதற்கு காரணம் மக்களுக்கான மக்களாட்சி செய்து வரும் திராவிட மாடல் ஆட்சி நாயகன் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களே என்றார்.

எல்லோருக்கும் எல்லாம் என்ற நிலை தமிழகத்தில் உருவாகி வருகிறது. அனைத்து நலத்திட்டங்களும் இல்லம் தேடி செல்கிறது. கிராமப்புற சாலைகள் மேம்பட்டு வருவதால் போக்குவரத்து மட்டுமின்றி கிராமங்களில் உள்ளவருக்கு அனைத்து வசதியும் கிடைத்து வருகிறது. பிரதம மந்திரி மேம்பாட்டு சாலை ஒரு சில இடங்களில் சேதமடைந்துள்ளது. அவற்றையும் சரி செய்ய உத்தரவிடப்பட்டு விரைவில் அதற்கான பணிகள் நடைபெற உள்ளது. இது தவிர மகளிர் உரிமைத்தொகை கிடைக்காதவர்கள் அருகில் உள்ள கட்சி நிர்வாகிகளிடமோ உள்ளாட்சி பிரதிநிதியிடமோ மனுக்களை கொடுங்கள். அவர்கள் மூலம் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மனு சென்று விரைவில் மகளிர் உரிமைத்தொகை கிடைக்கும் என்றார்.

அதன் பின்னர் நிருபர் மத்தியில் பேசிய அமைச்சர் இ.பெரியசாமி தமிழகத்தில் மட்டும் தான்; பள்ளி செல்லும் குழந்தைகளுக்கும், கல்லூரி செல்லும் மாணவர்களுக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கி வருவதால் இந்தியாவிலேயே உயர்கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகம் உள்ள மாநிலம் தமிழகம் என்ற பெருமையை பெற்றுள்ளது என்றார்.

நிகழ்ச்சியில் ஆத்தூர் வட்டாட்சியர் வடிவேல் முருகன், மாவட்ட தகவல் தொழில்நுட் அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், தொண்டரணி துணை அமைப்பாளர்கள் கும்மம்பட்டி விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மனலூர் மணிகண்டன், நிறைவாக வட்டார வளர்ச்சி அலுவலர் ஆத்தூர் முருகன் நன்றி கூறினார்.

### ஆதாரங்களுடன் கூறுவாரா அண்ணாமலை?

# மோடி அறிவித்த வாக்குறுதிகளில் எத்தனை நிறைவேற்றியுள்ளார்?

## தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் - கு.செல்வப் பெருந்தகை எம்.எல்.ஏ. கேள்வி!



சென்னை, ஜூன் 14- கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு?-

கடந்த 2014, 2019 மக்களவைத் தேர்தல் பரப்புரையின் போது பிரதமர் மோடி கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றி விட்டதாகவும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கொடுத்த 512 வாக்குறுதிகளில் 50 கூட நிறைவேற்றப்படவில்லை என கோணி புளுகன் கோயபல்சை மிஞ்சுகிற வகையில் காழ்ப்புணர்ச்சியுடன் தமிழக பா.ஜ.க. முன்னாள் தலைவர் அண்ணாமலை கருத்து கூறியிருக்கிறார். பதவி போன பிறகு காணாமல் போய்விட்டதாக யாரும் கருதக் கூடாது என்பதற்காக தனது இருப்பை காட்டிக் கொள்வதற்கு இத்தகைய அவதூறு கருத்துகளை கூறி வருகிறார்.

2014 மக்களவை தேர்தல் பரப்புரையின் போது நரேந்திர மோடி கொடுத்த வாக்குறுதிகளில் எதை நிறைவேற்றினார் என்று விளக்காமல் பொத்தாம் பொதுவாக கூறியிருக்கிறார். அன்று நரேந்திர மோடி, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும், விவசாயிகளின் விளை பொருட்களுக்கு எம்.எஸ். சுவாமிநாதன் குழு பரிந்துரையின்படி குறைந்தபட்ச ஆதரவு விலை வழங்கப்படும், ஸ்விஸ் வங்கியில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள ரூபாய் 85 லட்சம் கோடி கருப்பு பணத்தை மீட்டு அனைத்து இந்திய குடிமக்களின் வங்கிக் கணக்கிலும் ரூபாய் 15 லட்சம் டெபாசிட் செய்யப்படும் என்பது உள்ளிட்ட பல கோரிக்கைகளை வாரி வழங்கினார். இந்த வாக்குறுதிகளில் எதை பிரதமர் மோடி கடந்த 11 ஆண்டுகளில் நிறைவேற்றினார் என்பதை அண்ணாமலை ஆதாரத்துடன் விளக்கமாக கூறுவாரா ? கொடுத்த வாக்குறுதிகளின் படி ஆண்டுக்கு 2 கோடி பேர் வீதம் 11 ஆண்டுகளில் 22 கோடி பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கியிருக்க வேண்டும். ஆனால், 45 வருடங்களில் இல்லாத அளவிற்கு வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்தாடி வருகிறது. வடமாநிலங்களைச் சேர்ந்தவர்கள் வேலை வாய்ப்பு தேடி லட்சக்கணக்கானோர் தமிழ்நாட்டில் தினக் கூலிகளாக வேலை செய்கிறார்கள். மோடி ஆட்சியில் வேலையில்லா திண்டாட்டம் தலைவிரித்தாடி வருவதற்கு இதைவிட எந்த சான்றும் தேவையில்லை.

விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றக் கோரி தலைநகர் தில்லியில் ஓராண்டுக்கும் மேலாக மக்கள் விரோத விவசாய சட்டங்களுக்கு எதிராகவும், விளை பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை கோரியும், கடும் வெயிலையும், குளிரையும் பொருட்படுத்தாமல் நெடுஞ்சாலைகளில் தங்கி உணவு சமைத்து இரவு - பகல் பாராது போராடிய ஆயிரக்கணக்கான விவசாயிகளை சந்திக்க மறுத்த பிரதமர் மோடியை விட கல் நெஞ்சக்காரர் வேறு யாராவது இருக்க முடியுமா ? கருப்பு பணத்தை மீட்பதற்காக பணமதிப்பிழப்பு நடவடிக்கை எடுத்தார். அதனால் கருப்பு பணமும் ஒழியவில்லை. கள்ளப் பணமும் ஒழியவில்லை. கருப்புப் பணம் தான் வெள்ளைப் பணமாக மாறி, இந்திய பொருளாதாரம் படுகுழிக்கு தள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்ற கழக தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் கொடுத்த 512 வாக்குறுதிகளில் 85 சதவிகிதத்திற்கும் மேலாக கடந்த 4 ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. முத்திரைப் பதிக்கும் திட்டங்களாக கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, மகளிர் விடியல் பயணம், தோழி மகளிர் விடுதி, புதுமைப் பெண், தமிழ் புதல்வன், நான் முதல்வன் திட்டங்கள், காலை உணவு திட்டம், இல்லம் தேடி கல்வி, ஸ்டார்ட்அப் தமிழ்நாடு, நமக்கு நாமே திட்டம், மக்களை தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும் 48, கலைஞர் கைவினைஞர் திட்டம், கலைஞரின் கனவு இல்லம், முதலீட்டாளர்களின் முகவரியாக தமிழ்நாடு, அதன்மூலம் வேலை வாய்ப்பு பெருக்கம் என நாடு போற்றும் நான்காண்டு என அனைவரும் போற்றுகிற வகையில் சாதனைகளை படைத்து, நல்லாட்சி நடைபெற்று வருகிறது. இந்த சாதனைகள் மூலமாக நடைபெற்ற அனைத்து தேர்தல்களிலும் அமோக வெற்றி பெற்று வருவதை சகித்துக் கொள்ள முடியாத அண்ணாமலை போன்ற காழ்ப்புணர்ச்சியாளர்கள் தமிழ்நாடு அரசு மீது சேற்றை வாரி இறைக்கிறார்கள்.

ஒன்றிய பா.ஜ.க. அரசு, தமிழ்நாட்டை வஞ்சிக்கிற வகையில் நீட் நுழைவு தேர்வு திணிப்பு, புதிய கல்விக் கொள்கை, பி.எம்.ஸ்ரீ பள்ளிகள் மூலமாக இந்தி திணிப்பு, மாநில தொகுதிகளை குறைக்கும் வகையில் மக்களவை தொகுதி சீரமைப்பு, நிதிப் பகிர்வில் புறக்கணிப்பு, வெள்ள நிவாரண மறுப்பு, சிறுபான்மையினரை வஞ்சிக்கும் வக்பு வாரிய சட்டத் திருத்தம், குடியுரிமை சட்டத் திருத்தம், 100 நாள் வேலை திட்டத்திற்கு நிதி மறுப்பு, மீனவர் பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமல் 10 ஆண்டுகளில் 3544 மீனவர்கள் கைது, படகுகள் பறிமுதல், தமிழ்நாடு ஆளுநர் மூலம் சட்டமன்றத்தில் நிறைவேற்றிய மசோதாக்களை முடக்கியதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து போராடி உரிமைகளை பெறுகிற அவலநிலை என தமிழகத்தை வஞ்சிக்கிற பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. இது தான் ஒன்றிய மோடி அரசின் தமிழ்நாட்டை பழி வாங்கும் மக்கள் விரோத நடவடிக்கைகளின் பட்டியலாகும். இதற்குப் பிறகும் முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கிற வகையில் பேசும் அண்ணாமலை தனது அவதூறு பிரச்சாரத்தை நிறுத்திக் கொள்வது நல்லது. அமித்ஷா உள்ளிட்டவர்கள் மூலமாக எத்தகைய உத்திகளை கையாண்டாலும் தமிழ்நாட்டில் பா.ஜ.க. காலூன்ற முடியாது. தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராஜர் பிறந்த மண்ணில், ஆர்.எஸ்.எஸ், பா.ஜ.க. போன்ற வகுப்புவாத நச்சு சக்திகள் தலை தூக்க முடியாத வகையில், தமிழ்நாட்டு மக்களின் விழிப்புணர்வோடும், பேராதரவோடும், தி.மு.க. தலைமையிலான காங்கிரஸ் உள்ளிட்ட கட்டுக்கோப்பான ஒருங்கிணைந்த இந்தியா கூட்டணி முறியடிக்கும்.

இவ்வாறு அவர் அறிக்கை விடுத்துள்ளார்.

# கல்வித்துறையில் முத்திரை பதித்த திட்டங்களை செயல்படுத்தியவர் முதல்வர்!

## குன்றக்குடியில் - அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் பேச்சு!



சிவகங்கை, ஜூன் 14- சிவகங்கை மாவட்டம் காரைக்குடி தாலுகா குன்றக்குடியில் குன்றக்குடி ஆதீனம் நிர்வாகத்தின் கீழ் செயல்படும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கான. பிளஸ் டூ, எஸ்.எஸ்.எல்.சி. அரசு பொதுத்தேர்வில் முதல் மூன்று இடங்கள் பெற்ற மாணவர்களுக்கான பாராட்டு விழா ஒய்வு பெற்ற ஆசிரியர்களுக்கான பாராட்டு விழா தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன். பிளஸ்டு பத்தாம் வகுப்பு பாடத் தேர்வில் முதல் மூன்று இடம் பெற்ற மாணவ மாணவியர்களை பாராட்டியும் ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு பொன்னாடை போர்த்தியும் பேசியதாவது. அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் தனியார் பள்ளிக்கு இணையாக படிக்கும் வகையில் முதல்வர் அவர்கள் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி அதை செயல்படுத்தி வருகிறார். மாணவர்களின் நலன்களை கருத்தில் கொண்டு இந்த அரசு அமைந்துள்ளது. இல்லம்தேடி கல்வி திட்டம் நம்பள்ளி நம் பெருமை ,எண்ணும் எழுத்தும், நம்ம ஸ்கூல் பவுண்டேஷன், திறன்வகுப்புகள், உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வகம், மாதிரி பள்ளிக்கூடம், மற்றும் பல்வேறு மாணவ மாணவிகளுக்கான எண்ணற்ற திட்டங்களை முதல்வர் தலைமையின் திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வருகின்றது .இந்த திட்டத்தினால் அரசு பள்ளிகளில் சேரும் மாணவ மாணவியர் எண்ணிக்கை அதிகரித்து உள்ளது. தமிழகத்தில் கல்வி விகிதாச்சாரமும் அதிகரித்து வருகிறது .இந்தியாவிற்கே வழிகாட்டுதலாக அமைந்துள்ள முதல்வரின் காலை உணவுத் திட்டம் வயிற்றுப் பசியை மட்டும் போக்காமல் அறிவுப்பசியை உருவாக்கும் வகையில் அமைந்துள்ளது. இத்திட்டம் நாளைய தமிழகத்திற்கு அடித்தளமாக அமைந்துள்ளது.

இந்த கல்வியாண்டில் பத்தாம் வகுப்பில் சிவகங்கை மாவட்டம் 98.31% எடுத்து மாநிலத்தில் முதல் இடத்தை பெற்றுள்ளது. இதற்காக அயராது பணியாற்றிய கல்வித் துறை அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அதற்கு உதவிய பெற்றோர்களை நான் மனதார பாராட்டுகிறேன். இந்த முயற்சி தொடர வேண்டும். சிவகங்கை மாவட்டம் அனைத்து அரசு தேர்வுகளிலும் முதலிடம் பெரும் வகையில் பாராட்டினை பெற வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கே. ஆர். பெரிய கருப்பன் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் தனது சொந்த நிதியிலிருந்து ருபாய் 50ஆயிரத்தினை பிளஸ்டு பத்தாம் வகுப்பு தேர்வு முதல் மூன்று இடங்கள் பெற்ற மாணவ மாணவிகளுக்கு வழங்கி பாராட்டினார். முன்னதாக முனைவர் சேதுபதி வரவேற்றுப் பேசினார். மக்கள் கல்வி நிலைய அலுவலர் நாச்சி முத்து நன்றி கூறினார். இந்த நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, ஒன்றிய துணைச் செயலாளர் எஸ். முத்துக்குமார், எழுத்தாளர் சிங்காரம் உட்பட பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவ - மாணவிகள் கலந்து கொண்டார்கள்.



துணை முதலமைச்சர் அவர்கள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மூலம் முடிவுற்ற பணிகளை காணொலிக்காட்சியின் மூலம் திறந்து வைத்ததையொட்டி மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் மற்றும் இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ, ஆகியோர், இராமேஸ்வரம் இரண்டாம் நிலை நகராட்சியில் ரூ.52.60 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டத்தின் மூலம் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு மையத்தில் செயல்பாட்டு பணிகளை பார்வையிட்டார்கள். உடன் ராமேஸ்வரம் நகர் மன்ற தலைவர் நாசர்கான் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர் மயில்வாகனம் ஆகியோர் உள்ளனர்.